


### மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# முதலுதவி பயிற்சி முகாம்

குழித்துறை, மார்ச். 16-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் முதலுதவி மற்றும் மேலாண்மை பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கல்லூரி முதல்வர் ஷீலா கிறிஸ்டி தலைமை தாங்கினார். பேராசிரியர் ஜாண் சாமுவேல் வரவேற்று பேசினார்.

முகாமில் கல்லூரி தாளாளர் டாக்டர் வினோத் குமார் வாழ்த்தி பேசினார். இளைஞர் செஞ்சிலுவை சங்க பயிற்றுனர் பிலித் சுதர் மாணவ-மாணவிகளுக்கு பயிற்சி அளித்தார். திட்ட அலுவலர் ஜோஸ்பால் நன்றி கூறினார்.

முகாமுக்கான ஏற்பாடுகளை இளைஞர் செஞ்சிலுவை சங்க பேராசிரியர்கள், தன்னார்வ தொண்டர்கள், மாணவ-மாணவிகள் செய்திருந்தனர்.